Registered as a News Paper in Ceylon
P M G No. H A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணி மாதம் 28 ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். - சுஙு] யாழ்ப்பாணம்:- கரஉ வைகாசி மீ ககஉ வெள்ளிக்கிழமை (25 மே 1951) [இல். - கச]

அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை
1951 - ம் ஆண்டு மாநாட்டில்
சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியாரின்

## தலைமைப் பேருரை

(முற்றொடர்)

சிவாகம சாரமான மெய்கண்ட ஞான சாத்திரங்களின் முடிபு இது. மெய்ப் பொருள் - உண்மைப் பொருள் என்று விதந்து பேசப்படுவது இது.

"ஞானத் திரளாய் நின்ற பெருமான் [நல்ல அடியார்மேல்
ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் [பொருள்போலும்..."

(பிள்ளையார் - திரு அண். தேவாரம்)

"தங்குலவு சோதித்
தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்
டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந்
தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச்
சடையான் குணம்பரவி"

(திருவா. பொன்னூசல் 9)

என்பவை முதலிய திருவாக்குக்கள் காண்க. இவ்வாறு ஆட்கொள்ள வரும் சிவம் சைவனுய் வருவான் என்பது குரு வடிவம் கொண்டு பார்வை - உபதேசம் முதலிய தீக்கை வகைகளாலே உயிருக்கு அறிவு புகட்டித் தன்னை அறிவித்து, அஞ்ஞானத்தைப் போக்கும் சாதனங்களை அருள்புரிவான். உலகமெல்லாம் நிறைந்துள்ளது இந்தச் சிவத்தன்மையாகிய சைவம் என்னும் தத்துவமேயாகும். இதனைத் திருஞானசம்பந்த நாயனுர் போதி மங்கையில் சமயவாதம் மேற்கொண்டு அடர்த்து வந்த பவுத்தர்கள்பால் கருணை நோக்கம் வைத்து உபதேசித்தருளினர். "சைவமல்லாது மற்றொன்று மில்லையென் றே ... அவரில் கலைப் பொருளுணர்ந்தா ரருளிச்செய்ய..." என்றும், "அன்றவர்க் குக் கவுணியர்கோன் கருணை நோக்க மீனதலினு லறிவின்மை யகன்று நீங்கி, முன்றெழுது விழுந்தெழுந்து சைவரா ளுர்......நின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவ மேயாம் நிலைமையவர்க் கருள்செய்து..." என்ற பெரியபுராணத் திருவாக்குகள் காண்க. (திருஞான - புரா - 925 - 926 இவ்வாறு உள்ள கொள்கைகளின் தொகுதியே சைவம். இதனை மறவாமல் உள்ளத்திற்கொண்டு ஒழுகுபவனே சைவன் என்பது உண்மைப் பொருளாம்.

### தமிழ்

இனித் தமிழ் என்பதுபற்றி ஒரு சில கருத்துக்களைக் காண்போம். தமிழ் என்பது ஒரு மொழி; ஓர் உயர் தனிச் செம்மொழி; தெய்வத்தன்மை பெற்ற மொழி என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும். சைவனும் உணர வேண்டும். தமிழ் மொழிபற்றிப் பெருமிதமும் கொள்ளவேண்டும். ஆனல் அதுபற்றி வடமொழியையோ பிற மொழிகளையோ தாழ்த்துவதும் வெறுத்தலும் கூடாது. "தமிழ்ச்சொல் வடசொல் எனுமவ்விரண்டும், உணர்த்து மவனை யுணரலு மாமே" "ஆரியமுந் தமிழும்உடனேசொல்லிக், காரிகையார்க்குக் கருணைசெய் தானே" (திருமந்): "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" "தமிழ்ச் சொலும் வட சொலுந் தாணிழற் சேர" (தேவா) என்பன முதலிய திருமுறைத் திருவாக்குகள் காண்க. "வேதந் தமிழால் விரித்தார்" "புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரர்" "எனதுரை தனதுரையாக" முதலிய திருவாக்குகள் வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள உயர்ந்த பொருத்தங்களைக் காட்டுகின்றன.

இனித் தமிழுக்குத் தெய்வத் தமிழ் என்னும் மற்றோர் சிறப்புமுண்டு தெய்வத் தன்மையாவது சைவத்தினைப்பற்றி முன்கூறிய கொள்கைகளைப் பெற்றிருக்கும் நிலை. உயிர் - மெய் என்ற எழுத்துப் பாகுபாட்டின் பெயர்களும், பெயர் - வினை - வினையெச்சம் - வினை முற்று, வினையாலணையும் பெயர் என்ற சொற் பாகுபாட்டின் பெயர்களும், திணைப் பாகுபாடு முதலியவற்றின் பெயர்களும், பிறவும் தமது பெயராலும் அமைப்பாலுமே சைவசித்தாந்தக் கொள்கைகளைப் புலப்படுத்தி நிற்பதைக் கண்டுகொள்ளலாம். மொழியானது தன் அமைப்பிலேயே "தெய்வச் சிறப்பும் சிவனடியார் தஞ்சிறப்பும், சைவச் சிறப்பும்" புலப்பட நிற்பது தமிழின் பெருஞ் சிறப்பாகும்.

"உடல்மேலுயிர்வந்தொன் றுவதியல்பே"
"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

என்பன முதலிய தமிழ் இலக்கண அமைதிகளை ஞானநூற் கருத்தாகிய கண்கொண்டு பாருங்கள். இவ்வுண்மை விளங்கும். இப் பண்பு வேறு எம்மொழியிலும் காண இயலாது.

இனித், தமிழ்இருவகைப்படும்; சைவ தாம், உண்மையறிவித்து இறைவனுக்கு ஆட்படுத்தும் தமிழ் என்பதும், அவ்வாறு ஆட்படுத்தாத வெறுந் தமிழ் என்பதுமாம். தமிழைப் பாராட்டிப் பெருமை பேசுவோர் இதனையும் உடன் உணர்தல் வேண்டும். அந்நிலையேதான் பயன் தரும்

"வாயிருந் தமிழே படித்தாளுறு
ஆயிரஞ் சமணும் அழிவாக்கினன்"

என்பது இவ்வுண்மையை உபதேசிக்கும் தேவாரமாகிய அருள்மொழி; ஆட்படுத்துந் தமிழ்; ஞானத் தமிழ், திருநெறிய தமிழ் தண்டமிழ் என்றெல்லாம் போற்றப்படும், ஏனைய உலகியல் நிலைத்தமிழ் எல்லாம் ஞானத்தமிழுக்குச் சாதனமாக உள்ள அளவே கொளத் தக்கன. அப்படிக்கன்றிச் சமய ஞானம், மெய்ப்பொருள் இவற்றைப் புறக்கணித்து, வடித்துத் தள்ளிய தமிழ்கள் எல்லாம் ஆரவார நீர்மையவாகித் தள்ளத் தகுந்தவேயாம் என்பது அறிஞர் துணிபும் உண்மையுமாகும். "மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்கும் சிறப்பில்லார் தந் திறத்துச் சேரவை - யற" (போதம்) என்னும் உண்மை, தமிழ்மொழி நிலைக்கும் ஒக்கும்.

### சைவர் கடமை

இனிச், சைவர்களது கடமைகளைப் பற்றிச் சிறிதுபேசி இவ்வுரையை நிறை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## தோத்திரம்

"வீண ளந்த விரதமில் லாமலென்
சாண ளந்த சரீரந் தளர்வனே
சேண ளந்தவெண் டிங்களைச் செம்மணித்
தூண ளந்தம துரையிற் சோதியே"

இ—ள்: சேண் அளந்த வெண் திங்களை - ஆகாயத்தை அளவிடுவது போல உலாவுகின்ற வெண்ணிறமாகிய சந்திரனது ஒளியை, செம்மணித் தூண் அளந்த மதுரையில் - மாணிக்கரத்தினத்தால் செய்யப்பட்ட தூண்கள் (தம்முடைய செவ்வொளியால் மங்கச்செய்து செவ்வொளியைப் பரப்பித் தமக்குக் கீழ்ப்பட்ட ஒளியினதாக) அளந்து காட்டிய மதுரையம்பதியின்கண் எழுந்தருளிய, சோதியே - ஒளிவடிவினரே, என்சாண் அளந்த சரீரம் - எண்சாண் அளவினதாகிய (எனது) சரீரம், அளந்த விரதம் இல்லாமல் - (நூல்களாற் பலவகைப்பட) அளவிட்டுக் கூறிய தவச் செயல்களைச் செய்யாமற் கைவிட்டு, வீண் - வீணுக (அவச் செயல்களைச் செய்து என்றபடி), தளர்வனே - தளர்த்தக்கேனே (தவச் செயல்களைப் பயன்பெறும்படி எனக்கு அருள் செய்வீராக என்பது குறிப்பெச்சத்தாற் போந்த கருத்து) எ—று.

வீண் + தளர்வனே என இயைத்து உரைக்க.

வீண் - பிறவிக்குக் காரணமாகிய இலௌகிக கருமங்களாகிய அவச்செயல். விரதம் — சரியை கிரியை யோக ஞான ஒழுக்கங்களாகிய வீட்டிற்கேதுவான தவச் செயல்கள். ஓகாரம் - எதிர்மறையுடன் இரக்கப்பொருளில் வந்தது.

திங்கள் — ஈண்டுச் சந்திரனது ஒளியை ஆகுபெயரால் உணர்த்திற்று. இனி, "திங்களைச் செம்மணித் தூணளந்த மதுரை என்பதற்கு, திங்கள் மண்டலத்தின் உயரத்தைத் தனது எழுநிலை மாடங்களிலுள்ள தூண்களை அளவுகோலாகக் கொண்டு அளவிடத் தொடங்கிய மதுரை என்றுரைத்து, உலகொழுக்கிறந்த புனைந்துரையாகிய கௌடநெறியாகக் கோடலுமாம். காளிதாச மகாகவியும் இமய மலையைப்பற்றி வருணிக்குங்கால், பாரதகண்டத்தின் வடகீழ்க் கடலெல்லைக்குட்பட்ட பூமியை அளவிடும் அளவுகோல்போல இருந்தது இமயமலை என வருணிப்பது காண்க. (76)

## புடைவை நெசவுத் தொழிற்சாலை

### ஊரவர்கள் பங்குகள் வாங்க உரிமையுண்டு

அரசினர் ஆதரவில் நெசவுத் தொழிற்சாலையொன்றை ஸ்தாபித்தற்கு விரைவிலே ஆரம்ப முயற்சிகள் செய்யப்படுமெனக் கைத்தொழிற்பகுதி மந்திரி திரு. G. G. பொன்னம்பலம் கூறுகின்றார். இந்த ஸ்தாபனத்திற் பங்குகள் கொள்ளுதற்கு ஊரவர்களுக்கு உரிமை அளிக்கப்படும். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு ஆலைத் தொழிற் ஸ்தாபனத்துக்கு வேண்டிய இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியனவற்றை வரச்செய்வதுடன் ஏககாலத்திற்றனே ஊரவர்களும் பங்குகள் கொள்ளக்கூடிய ஓர் ஐக்கிய ஸ்தாபனத்தை உண்டுபண்ணுதற்குச் சட்டமும் ஆக்கப்படும்.

இத் திட்டத்திற்கு வேண்டிய பணம் 17,000,000 ரூபாவென மதிப்பிடப்படுகிறது. இத்தொகைப் பணத்தை இச்செலவுக்கென அரசாங்கம் வேறுகவைக்குமெனினும், ஐக்கிய ஸ்தாபனம் நிறுவப் பெறறபின் பொதுச் சனங்களுக்கு இத்தொகைக்குட்பட எத்தனை பங்குகள் வேண்டுமோ அத்தனை பங்குகளையும் ஜனங்கள் வாங்கலாமெனவும் அறிவிக்கப்படுகின்றது. ஐக்கிய ஸ்தாபனம் அரசாங்கத்தாரும் பொது ஜனங்களும் சேர்ந்தவோர் அதிகார சபையை உடையதாயிருக்கும். புடை நெசவு ஸ்தாபனத்தை காங்கேசன்துறைச் "சீமெந்து" தொழிற்சாலையைப்போல் ஸ்திரமான வர்த்தக முறையில் ஸ்தாபிப்பது தமது கருத்தென திரு. பொன்னம்பலம் தெரிவிக்கின்றார். அதிக இலாபமடைதல் தமது நோக்கமல்ல வெனவும், துணி வகையும் விலையும் வாங்குவோர்க்குத் திருத்தியளிப்பனவா யிருத்தல் வேண்டுமெனவும் கூறினர்.

முதற்படியாக 25,000 ராட்டினங்களும் தறிகளும் 500 இயந்திரத் தறிகளும் அமைக்கப்படவேண்டுமெனவும், நெசவுத் தொழிற்சாலையில் உண்டாக்கப்படும் பருத்தி நூலில் ஓர் பாகம் கைத்தறிகளில் "சாரம்" "கமபாயம்" முதலியன நெசவு செய்யுந் தொழிலாளர்களுக்குக் கிடைக்குமெனவுங் கூறினர். இம் முயற்சியின் பயனுக நெசவு விருத்தியடைந்து வருமெனவும், மக்களுக்குச் சாதாரண உபயோகத்துக்கு வேண்டிய சகல வகையான புடைவைகளையும் உள்நாட்டிலேயே உண்டுபண்ணிக்கொள்ளலாமெனவும் உத்தேசிக்கப்படுகிறது. இப் புதிய ஸ்தாபனம் ஏறக்குறைய இலங்கைவாசிகள் 1600 பேருக்கு வேலை கொடுக்கக்கூடுமென மந்திரியார் கூறுகின்றார். இதனால் வரக்கூடிய வருட வருவாய் 18,000,000 வரையிலென மதிப்பிடப்படுகிறது. இப்போது இலங்கையில் வருடந்தோறும் 75 000,0 0 யார் புடைவை செலவாகிறது. 1949 - ம ஆண்டில் விலைப்பட்ட துணியின் மொத்தம் 96,000 000 யார்- இத்தொகை காலகதியில் வருட மொன்றுக்கு 100,000,000 யாராக அதிகரித்துவிடுமென எண்ணக்கிடக்கிறதாம். இப்போதைக்கு நெசவு தொழிற் சாலையில் 18,000,000 யார் வரையிற்றான் நெசவுபண்ணப்படுமாம்.

இந்நெசவுச் சாலைக்கு பருத்திப் பஞ்சு தேவைப்படுதலால் இத்தேவை, நாட்டில் பருத்திச் செய்கையை அதிகமாகச் செய்தற்குத் தூண்டிவிடுமெனக் கருதப்படுகிறது.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ் கர ஞூ வைகாசி மீ ௧௧ உ வெள்ளிக்கிழமை


## புடைவை துணி ஆக்கத் தொழிற்சாலைத் திட்டம்

அந்நிய அரசினராகிய பறங்கியரும் ஒல்லாந்தரும் இந்நாட்டைக் கைப்பற்றி ஆண்டகாலத்தும் இந்நாட்டில் வாழ்ந்தமக்கள் புடைவை துணிக்கு முதற்காரணமாயுள்ள பஞ்சினைத் தரும் பருத்திச் செடிகளை இந்நாட்டிலுள்ள வன்னி முதலாம் நீர்வளம் பொருந்திய ஊர்களிற் பயிரிட்டு வளர்த்துப் பஞ்சைப் பெற்று, அப் பஞ்சினை நூலாக நூற்றுத்தம்உடைக்காகிய புடைவைதுணிகளைத் தாங்களே ஆக்கித் தரித்து வந்தார்களென இந் நாட்டுவரலாறு கூறும். தங்கள் தேவைக்கு மேற்பட்டு எஞ்சிய பருத்திப்பஞ்சை வட இலங்கையிலுள்ள ஒரு துறைமுக வாயிலாக இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்த காரணத்தினாலேயே, அத் துறைமுகம் பருத்தித்துறையென வழங்கலாயிற்றென்று காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டுள்ளோம். இந்நாட்டில் வசிக்கும் மக்களுக்கு புடைவை துணி முதலிய உடைப் பொருள் போதாவழி, அப் புடைவை துணிகளும் விலையுயர்ந்த பட்டாடைகளும் சருகைச் சேலைகளும் குறைந்த விலைக்கு இந்தியாவிலிருந்து இங்கே தருவிக்கப்பட்டன.

ஆனால், ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய பின்பே, வியாபாரமே தமக்குக் கைவந்த தொழிலாகக் கொண்ட அச்சாதியினர் தாங்கள் மேனாட்டிலிருந்து இலைவம் பஞ்சால் இயந்திரங்கள் வாயிலாக ஆக்கப்பட்ட சேலை புடைவை துணிகளை மிகவும் குறைந்த விலைக்கு விற்கத் தலைப்பட்டமையினாலேதான், இலங்கை மக்கள் செய்துவந்த நூல் நூற்கும் தொழிலும், புடைவை துணி நெசவு செய்யுந் தொழிலும் தேய்ந்தொழிந்தன. இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையேயுள்ள புடைவை வியாபாரமுங் குன்றத் தலைப்பட்டது. மேனாட்டிலாக்கப்படும் மலிந்த சரக்குக்களான புடைவைதுணிகள் இந்நாட்டில் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன. இதற்கிடையிற் கிழக்கிலுள்ள யப்பானியர் தலைப்பட்டு மேனாட்டிலாக்கப்படும் துணிகளைக் காட்டிலும் சிறந்த புடைவை துணிகளை இந்நாட்டிலே இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விற்று வந்தனர். யப்பானியர் செய்துவந்த வியாபாரம் ஐரோப்பிய புடைவை வியாபாரிகளின் பொருள் விருத்திக்கு இடையூறா யிருந்தது. இங்ஙனமிருந்த காலத்திலேயே உலக இரண்டாம் யுத்தந் தொடங்கி எவ்வகையான தொழில்களையும் விவசாயம் வியாபாரம் முதலியனவற்றையும் ஒருங்கு கெடுத்தது. பிருத்தானியர் எக்காலத்தாயினும் இந்த நாட்டிலுள்ள மக்கள் இந்த நாட்டிலேயே தங்களுக்குப் போதிய புடைவை துணிகளை உடுத்திக்கொள்வதற்கு எவ்வகையான துணையும் புரியாமையினால், இங்குள்ளார் தங்கள் மானத்தைக் காப்பதற்கு உடுக்குந் துணியின் பொருட்டுப் பட்ட பஞ்சம் கொஞ்சமல்ல. அந்த நேரத்திலே புடைவை துணிக் கட்டுப்பாடு அதிகப்பட்டு அதனால் மக்கள் கஷ்டப்பட, கொழும்பைச் சேர்ந்த வெள்ளவத்தையிலே வியாபார சமுதாயத்தாரால் நடத்தப்பட்டு வந்த ஒரு புடைவைத் தொழிற்சாலை, அரசினர் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கமைந்து தன்னாலியன்ற புடைவை துணிகளை இங்குள்ள மக்களுக்கு ஒரு அளவிற் கொடுத்து வந்தது. அந்தத் தொழிற்சாலையும் காலகதியில் இல்லாதொழிந்தது. இக்காலத்தில் இந்நாட்டு மக்கள் தங்கள் உடையின்பொருட்டு எந்த நேரமும் அந்நியநாடுகளை எதிர்பார்த்தவண்ணமே ஆவலோடிருக்கின்றார்கள்.

இவைகளையெல்லாம் உத்தேசித்துப்போலும், இப்பொழுது தொழில் முதலிய பகுதிகளின் மந்திரியாகிய திரு. G. G. பொன்னம்பலம் இந்நாட்டு மக்கள் பஞ்சப்படுதலின்றி அணிந்துகொள்வதற்குப் போதிய புடைவை துணிகளை ஆக்கத்தக்க ஒரு நெசவு தொழிற்சாலையையும், நூல் நூற்கும் ஒழுங்குகளையும், நூலையாக்குதற்கான பஞ்சைத் தரும் பருத்திச்செய்கை விருத்தியையும் தரத்தக்க ஒரு பெருந் திட்டத்தை யிட்டுள்ளார். இத்திட்டம் அரசினர் பொறுப்பிலே தொடங்கப்படுமெனினும், ஊரவர்களின் பணப்பங்குகளையும் பெற்றே நடைபெறுமாம்; இப்படி அரசினரும் ஊரவர்களும் சேர்ந்த கருமஞ்செய்யுந் திட்டம இதற்கு முன் இந்நாட்டில் இல்லையெனலாம்; இப்படியான திட்டம் அரசினர் ஊரவர்களென்னு மிருபாலாரிடத்தும் பெரும் அபிமானம் விளைப்பதாகும்; இத்திட்டத்தின் விபரம் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிடப்பெற்றுள்ளது. இத்திட்டத்தின் பயனாக மூவகைத்தொழில் இந்நாட்டில் நடைபெறல் வேண்டும்; புடைவை துணி நெசவு செய்தல், நூல் நூற்றல்; இவற்றிற்கு முதற்காரணமாகிய பஞ்சின் பொருட்டுப் பருத்திச் செடியை இந்நாட்டில் விருத்தி செய்தலாம். இப்படியெல்லாஞ் செய்யப்புகின் இந்நாட்டிலிருந்து சேலை துணியென்னு மிவற்றின் பொருட்டு அந்நிய நாடுகளுக்கு எந்த நேரமுஞ் செல்லும் பணம், இனிமேற் செல்லமாட்டாதென்பது நிசமாகும்.

இவைமாத்திரமல்லாமல் இந்நாட்டிலே இக்காலத்தில் வேலையின்றித் திண்டாடும் ஏழை மக்களுள், குறித்த தொழிற்சாலை நடைபெறுமானால், 1600 பேருக்கு வேலை கிடைக்குமெனத் திரு. பொன்னம்பலம் மதிப்பிடுகின்றார்; குறித்த தொகையினர் மேற்படி தொழிற்சாலையில் அகத்தே நின்று வேலைசெய்பவர்களாக, புறத்தே நின்று இத் தொழிற்சாலை வாயிலாக வேலை செய்து பிழைக்கத்தக்கவரின் தொகை மேலுஞ் சில ஆயிரமெனலாம்; இனி நூல் நூற்றல், பருத்திச் செடியாக்கல் முதலியவற்றிலும் சில ஆயிரக் கணக்கான மக்கள் ஈடுபட்டு உழைக்கப்புகின், இத்திட்டம் பல்லாயிரக் கணக்கானோர்க்குத் தொழில் காட்டுமென நாம் காத்திருக்கலாமல்லவா? இந்த விஷயமாகத் திரு. பொன்னம்பலத்தை நாம் பாராட்டுகின்றோம்.

இந்தப் புதிய திட்டத்தில் ஊரவர்களும் பணமுதவிப் பங்கு பற்றுவது ஒரு சிறந்த புதிய முறையாகும்; ஆனால் ஒரு பங்கின் தொகை அதிகமாகவிராது, அற்பமாக நியமிக்கப்படுமெனின் செல்வர்களன்றி இடை நிலையிலுள்ள மக்களும் தங்களாலியன்ற பங்கை வாங்கி அபிமானித்தல் முடியும்; செல்வர்கள், வேணுமானாற் பல பங்குகளை வாங்கிக்கொள்ளலாகும். இப்பொழுதுள்ளதாகிய காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையைப்போல, மட்டக்களப்பைச் சேர்ந்த வாழைச்சேனையில் ஆயத்தஞ் செய்யப்படும் காகிதத் தொழிற் சாலையைப் போல, இப்பொழுது திட்டமிடப்பட்டிருக்கும் புடைவை துணித் தொழிற்சாலையைப் போல, இன்னமும் இந் நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள் கட்காகிய சில தொழிற்சாலைகளை அரசினர் ஊரவரையுஞ் சேர்த்து ஆக்கி நடக்கத் தொடங்கினால் இந்நாட்டு மக்களுக்கு எவ்வகையான குறையுமில்லையாம்.

## விவாகம்

திரு. S. முத்துவின் புதல்வன் திரு. முருகுப்பிள்ளைக்கும், திரு. V. நடராசாவின் புதல்வி திருவளர் செல்வி இராஜராஜேஸ்வரிக்கும் சென்ற வெள்ளிக்கிழமை (18-5-51) காலை 8 மணிவரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் வெள்ளவத்தையிலுள்ள மணமகள் வாசஸ்தானத்தில் விவாகம் வெகு சிறப்பாக இனிது நிறைவேறியது. தம்பதிகள் சகல செல்வங்களையும் பெற்று வாழ்வார்களாக.

## அச்செழு மக்களின் புத்துணர்வு

வனப்பினும் அமைப்பினும் சிறந்த வாசகசாலைக் கட்டடத்தின் திறப்பு விழா வைபவம் அச்செழுக் கிராமத்திலே மிக விமரிசையாக இந்த வைகாசி மாதம் 7-ந் திகதி மாலை 6 மணியளவில் நடந்தேறியது. பாராளுமன்ற அங்கத்தவர் திரு. C. வன்னியசிங்கத்தையும் முகாந்திரம் அத்தியார் அருணாசலத்தையும் மோட்டார் ரதத்தில் மேளவாத்திய சகிதம் நீர்வேலிச் சந்தியிலிருந்து அழைத்து வந்து வாசகசாலைக் கட்டட முன்றிலில் மாலை சூட்டி வரவேற்றனர். திரு. C. வன்னியசிங்கம் திரு. R- அம்பலவாணரின் கேள்விப்படி வாசகசாலைக் கட்டடத்தைத் திறந்துவைத்துத் தலைமைதாங்கிப் பகிரங்கக் கூட்டத்தினை நடத்தினர். சொற்பொழிவாளர்கள் இவ் வாசகசாலையை அமைத்தற்குக் காரணமாயிருந்த சனசமூக நிலையம் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சேவையைப் பாராட்டியதுடன் அச்செழு மக்களின் புத்துணர்வுக்கு இது ஓர் அத்தாட்சியாகுமென்று கூறினர். தருமசாதனமாக இதற்கு நிலமளித்துதவிய திரு. இ. கார்த்திகேசவும் கட்டடத்திற்கென நிதியளித்துதவிய கிராம மக்களும் இந்நிலையத்தால் என்ஞான்றும் நினைவு கூரற்குரியர்.

—கடித.

## கதிர்காம யாத்திரைத் தொண்டர் சபை

### 1951-ம் ஆண்டு கதிர்காம ஆடி உற்சவம்

கடந்த சில வருஷங்களாகக் கதிர்காமத்தில் டாக்டர் அப்பாசாமி மடத்திலும் செல்லக்கதிர்காமத்திலும், இராமக்கிருஷ்ண மிஷன் கதிர்காம யாத்திரைத் தொண்டர் சபை, யாத்திரிகர்களுக்கு வருஷாந்த ஆடித் திருவிழா நாட்களில் அன்னதானம் செய்துவந்தார்கள். இச்சபையார் கதிர்காமத்தில் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானஞ் செய்வதோடு, தெய்வானையம்மன் கோவிலடியில் தண்ணீர்ப்பந்தல் அமைப்பித்து, சர்க்கரைப்பானம், தோடம்பழ ரசம், மோர் முதலிய பானங்களுங் கொடுத்து வந்தார்கள். இம்முறையும் திருவிழா நாட்களில் தினந்தோறும் அவ்விதம் அன்னதானம் அளிப்பதற்கும், பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு மோர் முதலிய பானங்களைக் கொடுப்பதற்கும், வேண்டிய பண உதவி, பொருளுதவி செய்ய விரும்புவோர், தங்களால் இயன்றவற்றை யூலாய் மாசம் 10-ம் திகதிக்கு முந்திய என். நவரத்தினம், இராமக்கிருஷ்ண மிஷன், 44-ம் லேன், வெள்ளவத்தை (போன் நம்பர் 8253) கா. கனகரத்தினம், பிறக்டர், 11, வில்சன் தெரு, கோட்டை, கொழும்பு (போன் நம்பர் 5466) ஆகிய இருவரில் ஒருவருக்கு அனுப்பிவைத்தால் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த வருஷம் கதிர்காமத்தில் யூலாய்மாசம் 4-ம் திகதி புதன்கிழமை கொடி ஏறி, யூலாய் மாசம் 19-ம் திகதி வியாழக் கிழமை தீர்த்தம் நடைபெறுமாம்.

## ஆடு கோழி பலியிடுதல் குறைந்து வருகின்றது

ஆடு கோழிகளைப் பலியிடுதலை இன்னமுந் தவிர்க்காத சிலவினுஞ் சில கோயில்களுள் தெல்லிப்பழை வைரவகோயிலுமொன்றாம். இது தெல்லிப்பழை கடித ஸ்தானத்திற் கணித்தாகவுள்ளது. முந்திய ஆண்டுகளிற் ஆயிரக்கணக்கான ஆடுகளும் பல்லாயிரக் கணக்கான கோழிச் சேவல்களும் பலி என வதைக்கப்பட்டன. ஆனால் இந்தஆண்டு 92 ஆட்டுக் கடாக்களும் 100 வரை கொண்ட கோழிச் சேவல்களும் கொலை செய்யப்பட்டனவாம். இத்தீமையை அறவே ஒழிப்பதற்கு இங்குள்ள வாலிபர்கள் பெருமுயற்சி செய்கின்றார்கள். —கடித.

## ஊர்காவற்றுறைப் பாதை உதவாமற் கிடக்கிறது

### பிரயாணிகள் படுங் கஷ்டம்

ஊர்காவற்றுறைக் கடலில் இடைவிடாது போக்குவரவுசெய்துவந்த மோட்டார் யந்திரத்தினுல் இயக்கப்படும் பாதை இயந்திரத்தில் ஏதோ பழுது சேர்ந்தமையினுல் சென்ற மூன்று வாரங்களாக அப்படிப் போக்கு வரவு செய்ய முடியாமற் கிடக்கின்றது. பழுதுபார்த்துப் பழையபடி ஓடுவதற்கு இன்னும் ஒருமாச காலமாயினுஞ் செல்லுமென உத்தேசிக்கப்படுகின்றது. இப்பொழுது கையாலியக்கப்படும் பாதையே போக்குவரவுக்கு உபயோகப்படுகின்றது. இதுவாயிலாகப் போக்குவரவு செய்யில் அதிககால தாமதமாகு மென்பதை எவருமறிவர். துறைமுகத்தின் இக்கரையிலு மக்கரையிலும் பல மோட்டார் ரதங்களும் மாட்டுவண்டி முதலியனவும் நிரை நிரையே சமயம் பார்த்துக்கொண்டு மணிக்கணக்கில் வெய்யிலில் நிற்கின்றன.

இப்பாதை மூலம் போக்கு வரவு செய்யும் உத்தியோகத்தரும் வேறு கருமம் பார்ப்பவர்களும் தங்கள் தங்கள் ஸ்தானங்களுக்குப் போக இயலாது இடர்படுகின்றனர். கிச்சீர்கேட்டை மேலதிகாரிகள் அவதானித்து நீக்குதற்காகிய முயற்சிகளை இன்னமுஞ் செய்யவில்லையென அங்குள்ள கடிதர் தெரிவிக்கிறார்.

## திருச்சி ரேடியோ

❋ இசைத்தட்டு

**சனி மே 26**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 என் வி ஜானகிராமபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 நீலம்மா டம்பி வீணை, பாட்டு * 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 இருவயலின் 5 45இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோவாத்தியகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 முசிரி சுப்பிரமணிய ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 கவிசொக்கேசர் 9 30 ராஜாபாபு தேவ் ஒலிப்பதிவு 10 முடிவு

**ஞாயிறு மே 27**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 12 45 பிலிம் வாத்யகோஷ்டி * 1 மணிமகர் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 எம் என் சுப்புலக்ஷ்மி * 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் 2 30 செண்டு இசைநிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 ஆர் வி சுந்தரமய்யர் வீணை 5 45 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் 7 45 ரேடியோ அறிமுகம் 8 மறந்தவர் நாடகம் 8 30 பத்மா கோபாலகிருஷ்ணன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 ஆர் வி சுந்தரமய்யர் வீணை 10 முடிவு.

**திங்கள் மே 28**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே வி நடராசன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15சித்ரகானம்* 8 30 முடிவு

1 நீங்கள்கேட்டவை* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 டி என் ராஜரத்தினம் பிள்ளை நாகஸ்வரம் * 2 தமிழில்செய்தி 2 10 ராஜாமான் சுந்தரராஜன் பாட்டு 2 45 முடிவு

மாலை 5 30 எஸ் ராமய்யர் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 கர்னாடகசங்கீதத்தின் வரலாறு 8 எஸ் ராமய்யர் புல்லாங்குழல் 8 30 குரல்வளை 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கே வி நடராஜன் பாட்டு 10 முடிவு.

**செவ்வாய் மே 29**

காலை 7 10 கீதாரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 காஞ்சிபுரம் வி வி கிட்டப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 வீணை* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 இருகுரலிசை* 2 தமிழில் செய்தி 2 10 காஞ்சிபுரம் வி வி கிட்டப்பா பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 காமகோடிபாய் ஜலதரங்கம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 சிதம்பரம் கே சோமதி அம்மாள் பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 நாண்டோனன்* 7 45 குழிக்கரை ஏல் பிச்சையப்பா பிள்ளை நாகஸ்வரம் கே பக்கிரிசாமிபிள்ளை தவில் 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 சிதம்பரம் கே சோமதிஅம்மாள் பாட்டு 10 முடிவு.

# தலைமைப்பேருரை

1-ம் பக்கத் தொடர்ச்சி

வாக்க நினைக்கின்றேன். மறை ஒழுக்கமும், திருநீற்றின் விளக்கமும், சைவர் கூட்டமும் சுருங்கி வருகின்றதும், உலோகாயத முதலிய புறச்சமயக் களைப்பயிர்கள் பெருகி வருகின்றதும் கண்டு, செயலாளர் கமது திரு. வே. சங்கரப்பிள்ளை முதலிய பெரியோர்கள் வருந்துவது பற்றி முன்னே பேசினேம். அஃதுண்மையே. ஆனுல் மறக்கமுடியாத மற்றோர் உண்மையுமுண்டு; சைவாதீன கருத்தர்களின் அருள் முயற்சிகளாலும், மற்றும் பல சைவப் பெரியோர்களும் சைவ சபைகளும் செய்யும் நன் முயற்சிகளாலும் முன்னை நாளிலும்விட இப்போது பற்பல சைவப் பத்திரிகைகளும் பிரசுரங்களும் ஆயிரம் பதினாயிரமாகத் திருமுறைகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன; சைப்பிரசாரகர்கள் பலர் பற்பல ஆயிரமக்களைக் கூட்டி அவர்களுக்குச் சைவ நல்லறிவு புகட்டி வருகின்றார்கள். இதுவும் உண்மைதான். ஆனுல் சைவ ஆக்கமும் திருநீற்றின் விளக்கமும் ஒழுக்கமும் குறைவானேன்? எனில், சர்க்கரை என் றெழுதினுலும் சொல்லக் கேட்டாலும் இனிய சுவை வராது; பாக சாத்திரம் முழுதும் படித்துத் தேர்ந்தாலும் பசிமாருது. சைவ சாத்திரமும் தோத்திரமும் படித்தல் நன்றுதான். ஆனுல் அதுமட்டும் போதிய பலன் தராது. படித்த நிலைகளை ஒழுக்கத்திற் கொண்டுவருதல்வேண்டும். அஃதில்லாமையால்தான் சைவ நன் மக்களின் தொகை குறைகின்றது. சரியை என்பது சைவ சாதனங்களுள் முதற் படியாகும்; "சுத்த சைவத் துக்குயிரதே" என்று சரியையைப் போற்றுகிருர் திருமூலர். சரியையில் நிற்போர் தொகை எவ்வளவு என்பது பாருங்கள். சைவ நன்மக்கள் தத்தம் வீடுகள் தோறும் சிவனுக்கான ஒரு சில பூமரம் - செடி கொடிகளை வைத்துப் பயிராக்கி அவற்றின் பூக்களை எடுத்துச் சிவனுக்குச் சாத்தலாமே. இது செய்யும் சைவர்கள் எத்தனைப் பேர்? "காலை யெழுந்து கடிமலர் தாயன தாங்கொணர்ந்து", "பறித்த மலர்கொடுவந் தமை யேத்தும் பணியடியோம்", "பூமாலை புனைந்தேத்தேன" என்பன எல்லாம் நூல்களின் அளவே நிற்குமாஞல் சைவ ஆக்கம் எங்கே நிகழும்? சைவ நல்லாசாரியரை அடுத்து ஒரு தீக்கையேனும் இரண்டேனும் பெற்றுக்கொண்டு அவருபதேசப்படி திருநீறும் ஐந்தெழுத்தும் பயில்பவர் தொகை எவ்வளவு? "சேய மலித்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்றபடி திருவேடமும் சிவாலயமும் சைவர் மனத்தைக் கவர்கின்றனவா? வெறும் வாய் ஞானத்துடன் நில்லாமல் இவ்வொழுக்கங்கள் வளர வளரவே சைவம் தானே வளரும். முதல் ஆண்டின் அடியேனது தலைமையுரையில் உங்கள் சபையின் பெயரில் "இந்து இளைஞர் மகாநாடு" என்றிருந்ததனைச் சைவ இளைஞர் மாநாடு எனறு திருத்திக் கொள்ளுதல் பொருத்தும் என்று வேண்டிக்கொண்டேன். அதன் பேரில் சபையில் ஒரு விவாதம் வந்தது. எவ்லாரும் ஒருமித்த மனத்துடனே எனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டார்கள். இப்போது உங்கள் மாநாடு சைவ மாநாடாகத் திகழ்கின்றது. அதுபோலவே இன்னும் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். அஃதாவது, இம் மாநாடு மூன்று நாட்களில் ஒரு நாள் காலையில் ஒரு பகுதியை இம்மாநாட்டு மண்டபத்தையே தீட்சா மண்டபமாக்கித் தகுந்த சைவாசாரியார் ஒன்றிரண்டு பேர்களைக் கொண்டு ஆணும் பெண்ணுமாகக் குறைந்தது 100 பேர்களாவது சைவசமய முதல் தீக்கையேனும் பெற்றுத் திருநீறும் ஐந்தெழுத்தும் திருமுறைப் பாராயணமும் பயிலத் தொடங்குதல் சைவ ஆக்கத்துக்குரிய பெருஞ் சாதனம் என்பதேயாகும். திருவீதிகளில் தமிழ் மறைகளையும் சிவநாமங்களையும் முழக்கிக்கொண்டு நன்னுள்களில் அன்பர்கள் திரண்டு கூடி வலம் வருதல் சைவ ஆக்கத்திக்கு மற்றுமோர் பெருஞ் சாதனமாகும். சமது பரமாசாரியர்கள் அங்கங்கும் தல யாத்திரைகள் செய்து போந்தருளிய நிலைகள் இக்கருத்தைப் பற்றியன. திருவெம்பாவை, குயிற்பத்து, திருத்தசாங்கம் முதலியவற்றின் குறிப்பும் காண்க. சணாத நாயஞர் புராணத்தினுள் ஒரு சிறந்த வழியினைக் காட்டியருள்கின்றுர் சேக்கிழார் பெருமான்:—(1) "...விரும்பிவந்தணைவார்க்குத், தூயதைத்திருத் தொண்டினி லவர்தமைத் துறைதொறும் பயில்விப்பார்" (2) "நல்ல சந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர் கொய்வோர், பல்பணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர், அல்லு நண்பகலுந் திரு வலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள், எல்லையில்விளக் கெரிப்பவர் திருமுறை திருமுறை யெழுதுவோர் வாசிப்போர்" (3) "இனைய பஃறிருப் பணிகளி லணைந்தவர்க் கேற்றவத் திருத்தொண்டின், வினைவி ளங்கிட வேண்டிய குறையெலா முடித்துமே விடச்செய்தே, அனைய வத்திறம் புரிதலிற் றெண்டரை யாக்கி..." (4) இங்கு "நிலைபெறுமா றெண்ணுதியேல்", "ஆமாறன் திருவடிக்கே" என்பன முதலிய திருவாக்குக்களும், சேரமானுது வரலாறும் நினைவு கூர்தற்பாலன.

### முடிபு

அன்பர்களே! உங்கள் மாநாட்டின் நன் முயற்சிகள் எல்லாம் சிறந்தோங்கிச் சிவனருள் பெருகச் சாதனமாய் விளங்குக. இதனைச் சார்ந்த எல்லா அன்பர்களும் எல்லா நலங்களையும் பெற்று நீடு வாழ்க. மற்றுமொருமுறை உங்களுக்கு எனது நன்றி. சிவம் - சுபம்.

"என்று மின்பம் பெருகு மியல்பினுல்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்"

திருச்சிற்றம்பலம்

# நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (27-5-51—2-6-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

பணவருவாய்க்குரிய வாரம்; ஆனுல் உத்தியோக தானத்திற் பிணக்கும் சண்டையும் இடைபிடையே சேரக்கூடும்; புதிய கருமங்களெனில் அவதானமாகத் தொடங்கவு; எவ்விஷயத்திற்கும் எழுத்திற் பொறுப்புக் கொடுக்க வேண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசிரிடம் 1, 2-ம் பாதம்

இடையிடையே அற்ப தேக சுகவீன முண்டெனினும் இது அநுகூலமான கிழமையாகும்; வியாச்சிய மிருந்தால் வெற்றியும், பணவருவாயும், பலவர்க்கு அபஜெயமுமுண்டாம்; கிழமை முடிவிற் பிதிர் வழியாற் சில சங்கடம் சோதலுக கூடும்

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

இக்கிழமையின் முதனுளில் அவதானமாக நடவாடு; எஞ்சிய நாட்கள் காருமஞ் செய்தற்கு வாய்த்தவையாம்; உத்தியோக தானத்திற் எதுஞ் சஞ்சலம் சேர்ந்தால் அதனையிட்டுக் கவலைப்பட வேண்டாம்; அங்ஙனங் கவலைப்படில் தீமையுண்டாம்

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

கிழமையின் முதல் மூன்று தினத்திலுஞ் சாவதானமாக நடந்துகொள்க; உத்தியோகத்திற் பிணக்கு, அந்தரங்க பகைவராற் சஞ்சலம், மனக்கவலைகளுண்டாம்; எஞ்சிய நாட்களில் காரியசித்தி முதலியன வுண்டாம்; குடும்ப ஒற்றுமையும் சந்துரு நேசமுமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இந்த வாரத்தில் அநுகூலமுற வேண்டுமேல் அதிக முயற்சி செய்யவேண்டி நேரும்; வரவைக் காட்டிலுஞ் செலவதிகம்; மன ஆறுதலில்லை; புதன் வியாழக் கிழமைகளில் அவதானமாக நடந்து கொள்க.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இவ் வாரத்திற் புதிய முயற்சிகளிலே அநுகூலமுண்டாம்; பிரதானமாகச் செய்யவேண்டிய கருமங்களை வியாழக் கிழமைக்கு முந்தியே செய்க. கிழமையின் கடைசி இரு தினங்களிலும் அவதானமாக நடந்துகொள்க. அற்ப இடையூறும், சுகவீனமும் நேரக்கூடும்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

புது முயற்சிகளிற் சித்தியுண்டாம்; பண நஷ்டம் மனக்கவலையென்னுமிவைகள் சேர இடமுண்டு; சாவதானமாக நடவாதொழிந்தாற் சங்கடப்படவேண்டி நேரும்; பழிவார்த்தைக்குத் தப்பிநடந்து கொள்க.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இழந்த பொருள் இவ்வார மத்தியில் வந்து சேரினுஞ் சேரும்; புதுமும் சனசமூக சேவைகளிற் சித்தயுமுண்டு; கிழமை முடிவில் எதும் பிரதானமான நிகழ்ச்சி நடக்கவுங் கூடும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

பணவிஷயமாக அநுகூலமான வாரம்; மனாம்மியமுமுண்டு; கிழமை முடிவில் அந்நியரால் அதிக உதவியுண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

உத்தியோகத்திற் கஷ்டம் வீட்டில் இடைஞ்சல்களுண்டு; அந்தரங்க பகைவர் மாருகக்கருமமாற்றவுங்கூடும்; காலஞ் சுகம்வரும்வரை சாவதானமாக நடந்து கொள்ளவேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

புதிய கருமங்களில் அநுகூலமுண்டு; குடும்ப ஒற்றுமை, பகைவருக்குச் சேதமென்னுமிவைகளுமுண்டாம். எடுத்த புதிய கருமங்களை ஊக்கத்துடன் செய்க.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

நன்மையான வாரம்; ஆனுல் வரவைக்காட்டிலுஞ் செலவு அதிகமாம்; மேலுத்தியோகத்தரைப்பற்றிய விபரீத விளக்கம் வாரமுடிவில் அகன்றுவிடும்; குடும்ப ஒற்றுமையுமுண்டு.

# சைவ சமயத்திற் பெண்டிர் கல்வி

சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஏற்றுக்கொள்ள மனமின்றியிருக்கும் பரவையாரிடம் இறைவரே தூது செல்கின்றார். கதை தெரிந்ததுதானே. அங்கு இரவிலே அருமறை முனிவராய்ச் சென்று பரவையாரிடம் முதலிலேயே பீடிகை போட்டுப் பேசுகின்றார். என்ன சொல்கின்றார்:

"நங்கைநீ மறாது செய்யின்
நான்வந்த துரைப்ப தென்ன"

பரவையாரோ உடனே சம்மதியாது நீர் வந்த காரியம் இன்னதென்று சொன்னால் "இசையுமானால் பார்ப்போம்" என்று கூறுகிறார் தவிர, பெண்புத்தி பின்புத்தி தானே என்று கூறும்மொழிக்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோல,

"தங்கயல் விழியி னாரும் அதனைநீர்
அருளிச் செய்தால்"

என்று கூறிப் பின் இங்கெனக் கிசையுமானால் இசையலாம் என்ற பதிலில் ஆழ்ந்த அறிவுத் திறனும் உறுதியும் காணலாம்.

"என்னினைத் தணைந்ததென்பால்
இன்னதென் றருளிச்செய்தால்
பின்னையை தியலுமாகில் ஆம்" எனப்
பிரானுர் தாமும்
மின்னிடை மடவாய்! நம்பி
வாஇங்கு வேண்டும் என்ன
நன்னுத லாரும் "சால நன்று" நம்
பெருமை என்பார்.

பின்னர்தான சொல்லுகிறார்: "இந்த இரவிலே தாங்கள் வந்து சொன்ன காரியம் ரொம்ப அழகுதான். பங்குனித் திருநாளுக்குப் பொன் முதலியன கொண்டுவரப் போயிருக்கிறார் என நினைத்திருந்தேன். அவர் ஒற்றியூர் போய்ச் சங்கிலியை மணந்து உறுதிசெய்து கொடுத்துள்ளார். இங்கென்ன சாரவுண்டு" எனக் கூறும்பொழுது மறையவர் நம்பி செய்த குற்றத்தை மனதிற் கொள்ளாது ஏற்றுக்கொள்ளும்படி கூறும் பொழுது தான், பரவையாரின் புண்பட்ட உளத்தின் வேதனையை அவர் கூறும் வாக்கிலே காணலாம். அதுமட்டுமல்ல, பெருமைக்குத் தகுந்த பெரியோராகிய தங்களுக்கு இந்தவேலை வேண்டாம் என்று கூறுமுகத்தால் வீரமும் அறிவும் காணலாம்.

அருமறை முனிவ ரான ஐயரைத்
தைய லார்தாம்
கருமம்ஈ தாக நீர்இங் கடைந்தலை
வருகை மற்றும்
பெருமைக்குத் தகுவ தன்றால்
ஒற்றியூர் உறுதி பெற்றார்
வருவதற் கிசையேன் நீரும்
போமென மறுத்துச்
[சொன்னார்.

'அவரும் வரவேண்டாம் நீரும் போகலாம்' எனக் கூறுகிறார்.

இந்தத் தெய்வீகத் தம்பதிகளை ஒன்றுசேர்க்க இறைவனையே வேலை செய்யும்படிச்செய்த நம்பியாரூரரைக் காணவும் மனமின்றி, நோயின் கொடுமை தீர்க்க வருகின்றார் என அறிந்து உடைவாளால் வயிற்றைக்கிழி நோய்நீக்கி விடுதலைபெற்ற கலிக்காம நாயனார் மனைவியாரைக்கொஞ்சம் அறியலாம். தம் கணவரோடு உயிர்விட எத்தனித்த சமயம், நம்பியாரூரர் வந்துவிட்டார் என்பதைக் கேட்ட அம்மையார் அங்கு அழுது கொண்டிருந்தவர்களைத் தடுத்து, தம் கணவர் செய்கையை மறைத்து, வரும் நம்பியாரூரரை பூரணகும்பம், தீபம் ஏற்றித் தொழுது எதிர்கொள்ளச் சென்றார்.

நம்பியாரூரர் வந்து "ஏயர்கோன் உற்ற நோயினை நீக்கி உடனிருக்க வந்தேன்" என்று கூறும்பொழுது சாதாரணப் பெண்ணாக இருந்தால் எதிர்கொண்டழைக்க முடியுமா? உம்முடைய வருகையை அறிந்துதான் என் கணவர் உயிரிழந்தார். நீர் வராதிருந்தால் இருப்பாரே என்று கூறாது, ஏவலாளரிடம் உள்ளே பள்ளிகொண்டிருக்கிறார். அவருக்கு ஒரு குற்றமுமில்லை என்று சொல்லியனுப்பும் நிலையில், தம் துக்கத்தை மறைத்து அடியாரை வரவேற்கும் பக்தி நிலையில் நீருடைய திறம் காணலாம். "மாதர்தம் ஏவலாலே, ஏதமொன்றில்லை உள்ளே பள்ளி கொள்கின்றார்" என்று கூறுகிறார்.

—சித்தாந்தம்.


# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மூலதனம் | | 7, 500, 000-00 |
| கொடுக்கவிருக்கும் | " | 4, 500, 000-00 |
| கொடுபட்ட | " | 4,500, 000-00 |
| நிலைதரமான சேமநிதி | | 3, 000, 000-00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்டல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் காரியாலயம்:- 4-6—8 ஹட் கேட் ஸ்ட்ரீட் லண்டன்.E. C. 4.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி.
திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை
(பழையநகரமண்டபம்),பதுளை மட்டக்களப்பு.
யாழ்ப்பாணக்கிளைக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிறேட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகளை இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை பதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 வீதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.
பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

L P. N சிங்கம்
ஏஜெண்டு



# பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)
சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை. புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

சைவ சமயசாரம்:
ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)
சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எசசந் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியா கோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

td 14 20-11-46—20-11-49


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday May 25, 1951